# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்)*

---

*(2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, மாச்சு மாதம் 25 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 18.00*** ***தபாற் செலவு : ரூபா 15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம்**

[*2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 62/2018*

**(139 ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*139 ஆம் அத்தியாயத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்*

**2.** (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (139 ஆம் அத்தியாயமான) வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், ''வேலையாட்களின் தொழிலின் போது ஊறுக்குட்படுகின்ற'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வேலையாட்களின் தொழிலின் போது அல்லது அவர்களது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவர்களது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் ஊறுக்குட்படுகின்ற'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது, ''பகுதியளவிலான இயலாமை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> ''வதிவிடம்'' என்பது, வேலையாள் ஒருவரின் ஏதேனும் நிரந்தமான வதிவிடம் அல்லது வேலையாள் ஒருவர் அவரது வேலைத்தளத்துக்கு வரும் நோக்கத்துக்காக தற்காலிகமாக வசிக்கும் தங்குமனையொன்றை அல்லது வேறு ஏதேனும் இடத்தை உள்ளடக்கும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, ''தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழிலின் போதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில்

அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போதும் எழுந்துள்ளதாக அல்லது அவரது வதிவிடத் திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத் தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்குத் திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்றுள்ளதாக'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதானதாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்திற்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் குறிப்பிட்ட ஊறொன்றுக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதான தாக இருந்தாலொழிய அல்லது அந்நோயானது'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்*

**7**. பின்வரும் புதிய பிரிவானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

"நட்டஈட்டுத் தொகையைக் கணக்கிடுவதில் தொழிலின் தன்மை கவனத்திற் கொள்ளப் படுதல் வேண்டும்

6அ. ஆறாம் பிரிவில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், நிரந்தர அல்லது பகுதியளவிலான இயலாமையின் விடத்தில், ஏதேனும் ஊறு தொடர்பான வேலையாள் ஒருவரின் தொழிலின் தன்மை, நட்டஈட்டுத் தொகையைக் கணக்கிடுவதில் கவனத்திற் கொள்ளப்படுதல்

வேண்டும். அத்தகைய நட்டஈடு, இயைபான வைத்தியரொருவரினால் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''(ஈ) நாட்சம்பளம் பெறுகின்ற அல்லது துண்டுவீத அடிப்படையிலான வேலையாள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய வேலையாளின் மாதாந்த வேதனங்கள், பன்னிரெண்டால் பிரிக்கப்பட்டு மீண்டும் இருபத்தைந்தால் பிரிக்கப்பட்ட, எந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதியின் போது அத்தகைய வேலையாள் விபத்துக்கு நேர் முன்னர் சேவையில் இருந்துள்ளாரோ அந்த கடைசியான பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்கான நாளாந்த கொடுப்பனவுகள் அல்லது துண்டுவீதங்களின் ஈட்டுகைகளின் கூட்டுமொத்தமாகவிருத்தல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், ''கூட்டுமொத்தமாக பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கூட்டு மொத்தமாக இருபதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு பின்வரும் உட்பிரிவுகளினால் மாற்றீடுசெய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''(1) இறந்த வேலையாள் ஒருவர் தொடர்பில் நட்டஈடாக 11 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் பணத்தை வைப்பிலிட்டதன் மீது, ஆணையாளர், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத தொகை

யொன்றிற்கு வேலையாளின் மரணச்சடங்கு செலவுகளின் உள்ள படியான ஆகுசெலவை அதிலிருந்து கழித்தல் வேண்டும் என்பதுடன் அதனை எந்த ஆளினால் அத்தகைய செலவுகள் உறப்பட்டதோ அந்த ஆளுக்கு செலுத்துதலும் வேண்டும்.

(1அ) ஆணையாளர், நட்டஈட்டின் பகிர்ந்தளித்தலை தீர்மானிப் பதற்கு அவர் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அவரின் முன்னர் தோன்றுமாறு இலங்கையில் உள்ள இறந்த வதிவாளரின் ஒவ்வொரு தங்கிவாழுநரையும் கோரி அத்தகைய தங்கிவாழுநர்களின் மீது அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப் படுவதனை செய்வித்தல் வேண்டும். ஆணையாளர், அவர் அவசியமென கருதக்கூடியவாறான ஏதேனும் விசாரணையின் பின்னர், தங்கிவாழுநர் எவரும் இல்லையென திருப்திப்படின், அவர் எந்த தொழில்தருநரினால் பணம் செலுத்தப்பட்டதோ அந்த தொழில்தருநருக்கு அதன் மீதியை மீளச்செலுத்துதல் வேண்டும். ஆனால் அத்தகைய மீள்கொடுப்பனவு எதுவும், 11 ஆம் பிரிவின்கீழ் எந்தத் தேதியன்று பணம் வைப்பிலிடப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் பன்னிரெண்டு மாத காலப்பகுதி யொன்று முடிவுறுவதன் பின்னர் வரை செய்யப்படுதலாகாது. ஆணையாளர் தொழில்தருநரினாலான விண்ணப்பத்தின்மீது, செய்யப்பட்ட எல்லா செலுத்தீடுகளையும் விபரமாகக் காட்டுகின்ற கொடுத்துத் தீர்த்தலொன்றை கொடுத்துதவுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உப்பிரிவில், "விபத்து இடம்பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விபத்து இடம்பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள் அல்லது இறப்பின் விடயத்தில், இறந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவில், ''ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(3) தொழில்தருநர் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அறிவித்தற் புத்தகத்துக்கு மேலதிகமாக, பதிவேட்டுப் புத்தகமொன்றைப் பேணுதல் வேண்டும்; அதில் ஏதேனும் தொழிற்சாலை அல்லது வேலைத்தளத்திலான ஏதேனும் விபத்து பற்றிய தகவல்களும் விபரங்களும் இருத்தல் வேண்டும். தொழில்தருநர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்குப் பொறுப்பாகவிருப்பதற்கு பொறுப்பான ஆளொருவரையும் நியமித்தல் வேண்டும். ஆணையாளர் அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்துக்கு அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சோதனைக்காக அதன் பிரித்தெடுகைகளை அல்லது பிரதிகளைக் கோருதலும் வேண்டும்.''.

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''தொழிலின் போது எழுகின்றதுமான விபத்தொன்றின் விளைவாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழிலின் போது எழுகின்றதுமான அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்திற்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் விளைவாக'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5) ஆணையாளர், இறந்த வேலையாளின் மரணச் சடங்குச் செலவினமாக தொழில்தருநரினால் செலுத்தப் படற்பாலதான ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத பணத்தொகையொன்றை தீர்மானிக்கலாம். அத்தகைய பணத்தொகை தொழில்தருநரினால் செலுத்தப்படற் பாலதான நட்டஈட்டுக்கு மேலதிகமாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இயைபான தொழில்தருநரினால் ஆணை யாளருக்கு அல்லது அத்தகைய வேலையாளின் கிட்டிய உறவினருக்கு வைப்பிலிடப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்*

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

*"உரிய தேதியன்று நட்டஈடு செலுத்துவதற்கு தவறியதற்காக தொழில் தருநர்மீது மிகைக் கட்டணம் விதித்தல்*

23அ. இச்சட்டத்தின் கீழ், விடயத்துக்கேற்ப வேலையாள் ஒருவருக்கு அல்லது அவரது மரபுரிமை யாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகவிருந்து அப்பணத்தொகையை உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதற்கு தவறுகின்ற அல்லது தவணைதவறுகின்ற எவரேனும் தொழில்தருநர் விடயத்துக்கேற்ப, அவ்வேலையா ளுக்கு அல்லது அவரது மரபுரிமையாளர்களுக்கு நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகைக்கு மேலதிகமாக பின்வரும் முறையில் கணக்கிடப்பட்ட அப்பணத்தொகையின் மீது மிகைக்கட்டண மொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத் தொகையின் பத்து சதவீத மிகைக்கட்டண மொன்று;

(ஆ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஒரு மாதத்தை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத்தொகையின் பதினைந்து சதவீத மிகைக்கட்டணமொன்று;

(இ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது மூன்று மாதங்களை விஞ்சிய ஆனால், உரிய தேதி யிலிருந்து ஆறு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத் தொகையின் இருபது சதவீத மிகைக்கட்டண மொன்று;

(ஈ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது ஆறு மாதங் களை விஞ்சிய ஆனால், உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கு நிலுவையாகவுள்ள விடத்து, நட்டஈடாக வருமதியாகவுள்ள பணத் தொகையின் இருபத்தைந்து சதவீத மிகைக் கட்டணமொன்று; அல்லது

(உ) நட்டஈட்டுக் கொடுப்பனவானது உரிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களை விஞ்சிய காலப்பகுதியொன்றிற்கு நிலுவை யாகவுள்ளவிடத்து, நட்டஈடாக வருமதியாக வுள்ள பணத்தொகையின் முப்பது சதவீத மிகைக் கட்டணமொன்று.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

*“பதிவாளரின் நியமனம்*

27அ. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர் ஒருவர் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு, (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அறவிடப்பட முடியாவிடின், ஆணையாளர் தவணைதவறுபவரின் அசையா ஆதனத்தை கைப்பற்றுவதன் மூலம் அல்லது விற்பனை செய்வதன் மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம். 27அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வேலையாட்கள் நட்டஈட்டுப் பதிவாளர், எந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அத்தகைய தவணைதவறுபவர் வசிக்கிறாரோ அந்த இயைபான மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரினூடாக அத்தகைய கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும். நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில் பிசுக்காலினாலான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனை அத்துடன் பிசுக்காலினால் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலும் அவை மீது தீர்ப்பளித்தலும் தொடர்பான (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஆணையாளரின் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை அறவிடுவதற்கான அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனைக்கும் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக் கோரிக்கைகளைச் செய்தலுக்கும் அவைமீது தீர்ப்பளித்தலுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளின் ஏற்புடைமை நோக்கத்துக்காக, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பணத்தொகை நீதிமன்றத்தினால் பதியப்

பட்ட தீர்வையொன்றின் மீது வருமதியாகவுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தீர்ப்புக் கடன்கொடுநராகவும் அத்தகைய பணத் தொகையைச் செலுத்துவதற்கு ஆளான ஆள் தீர்ப்புக் கடனாளி ஒருவராகவும் கருதப்படுதலும் வேண்டும்.".

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உடன்படிக்கையானது மோசடி மூலம் அல்லது தகாத செல்வாக்கு மூலம் அல்லது வேறு முறையீனமான வழிவகைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதென அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்கப் படின் அல்லது உடன்படிக்கை அமைப்புப் புறவிதிகளின்கீழ் வேலையாளுக்கு செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத் தொகையின் பிறழ் கணக்கிடுகை அல்லது குறைமதிப்பீடு காரணமாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், " ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, "நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "நூறு ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டாயிரம் ரூபா பெறுமதிக்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு, ''மேன் முறையீட்டு நீதிமன்றமானது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமானது'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, ''மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தினால்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், ''தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத்தொன்றின் விளைவாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழிலிலிருந்தும் தொழிலின் போதும் எழுகின்ற விபத் தொன்றின் விளைவாக அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவு, ''தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத் துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம் எழுகின்ற'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ ஆம் பிரிவு, ''தொழிலிலிருந்து அல்லது தொழிலின்போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொழிலிலிருந்து அல்லது தொழிலின் போது எழுகின்ற விபத்தொன்றின் மூலம் அல்லது அவரது வதிவிடத்திலிருந்து வேலைத்தளத்துக்கு வருகையில் அல்லது வேலைத்தளத்திலிருந்து அவரது வதிவிடத்

துக்கு திரும்பிச் செல்லுகையில் இடம்பெற்ற விபத்தொன்றின் மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I இனை மாற்றீடு செய்தல்*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

"**அட்டவணை I** [*பிரிவு 2*]

**நிரந்தர/பகுதியளவிலான இயலாமையை விளைவிப்பதாகக் கருதப்படும் ஊறுகள் பற்றி நிரல்**

| *ஊறுகள்* | *சம்பாதிக்கும் ஆற்றல் இழப்பின் சதவீதம்* |
|---|---|
| நிரந்தரமானதும் குணப்படுத்த முடியாததுமான அவயங்களின் பாரிசம் அல்லது நிரந்தரமாக படுக்கையில் இருப்பதனை விளைவாக்குகின்ற ஊறுகள் | *100* |
| நிரந்தரமாகவே வேலை செய்ய முடியாத நிலையில் முடிந்ததான நிரந்தரமான குணப்படுத்த முடியாததான உளத்திறன் இழப்பு அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யமுடியாத நிலையினை ஏற்படுத்தும் வேறு ஏதேனும் ஊறு | *100* |
| கண் ஊறுகள் | |
| (i) இரண்டு கண்களினதும் கண் பார்வையினை முழுமையாக இழத்தல் | *100* |
| (ii) ஒரு கண்ணின் கண் பார்வையினை முழுமையாக இழத்தல் | *80* |
| கேள்விப்புலன் ஊறுகள் | |
| (i) கேள்விப்புலன் முழுமையாக இழத்தல் | *80* |
| (ii) ஒரு காதில் கோள்விப்புலனை முழுமையாக இழத்தல் | *50* |
| பேச்சை இழத்தல் | |
| (i) பேச்சை முழுமையாக இழத்தல் | *100* |
| உணர்திறன் இழப்பு | |
| (i) மணமும் சுவையும் அறியும் புலன்கள் முழுமையாக இழத்தல் | *60* |
| (ii) மணம் அறியும் புலனை முழுமையாக இழத்தல் | *60* |
| (iii) சுவை அறியும் புலனை முழுமையாக இழத்தல் | *60* |

| | |
|---|---|
| *முன்னங்கை ஊறுகள்* | |
| (i) *முழங்கையோடு அல்லது முழங்கைக்கு மேலேயிருந்து முன்னங்கையினை இழத்தல்* | *85* |
| (ii) *முழங்கையோடு அல்லது முழங்கைக்குக் கீழேயிருந்து முன்னங்கையினை இழத்தல்* | *80* |
| *கை ஊறுகள்* | |
| (i) *இரண்டு கைகளையும் இழத்தல்* | *100* |
| (ii) *கையினை இழத்தல் அல்லது பெருவிரலையும் நாலு விரல்களையும் இழத்தல்* | *80* |
| (iii) *பெருவிரல் (இருமொழிகளும்)* | *50* |
| (iv) *பெருவிரல் (ஒரு மொழி)* | *40* |
| (v) *நாலு விரல்களையும் இழத்தல்* | *80* |
| *சுட்டு விரல் இழத்தல்* | |
| (i) *மூன்று மொழிகள்* | *50* |
| (ii) *இரண்டு மொழிகள்* | *40* |
| (iii) *ஒரு மொழி* | *20* |
| *நடு, மோதிர மற்றும் சின்ன விரல்களை இழத்தல்* | |
| (i) *மூன்று மொழிகள்* | *30* |
| (ii) *இரண்டு மொழிகள்* | *20* |
| (iii) *ஒரு மொழி* | *15* |
| *காலை இழத்தல்* | |
| (i) *முழங்காலில் அல்லது முழங்காலுக்கு மேலே* | *90* |
| (ii) *முழங்காலில் அல்லது முழங்காலுக்கு கீழே* | *80* |
| *பாதத்தின் ஊறுகள்* | |
| (i) *இரண்டு பாதங்களையும் இழத்தல்* | *100* |
| (ii) *ஒரு பாதத்தினை இழத்தல்* | *90* |
| *கால் விரல்களை இழத்தல்* | |
| (i) *கால் பெருவிரல்-இரு மொழிகளும்* | *40* |
| (ii) *கால் பெருவிரல்-ஒரு மொழி* | *20* |
| (iii) *கால் பெருவிரல் தவிர்ந்த விரல்களில் ஒன்றுக்கு அதிகமானதை இழந்தால், ஒவ்வொன்றும்* | *20* |
| *நானாவிதமானவை* | |
| (i) *பாலுறுப்புக்களை முழுமையாக இழத்தல்* | *75* |
| (ii) *பாலுறுப்பினை பகுதியளவில் இழத்தல்* | *60* |
| (iii) *முகத்தினை மோசமாக வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல்* | *90* |
| (iv) *அதிகபட்ச அளவொன்றுக்கு, முகத்தினை வடுப்படுத்தல் அல்லது உருவழித்தல் தவிர்ந்த மோசமான உடல்சார்ந்த உருவழித்தல்* | *60* |
| (v) *ஒரு பல்லை இழத்தல்* | *10* |
| (vi) *மேலே குறிப்பிடப்படாததான (உதாரணம் மூக்கு, மார்பு, காது முதலியன) ஏதேனும் உறுப்பின் அல்லது அதன் பாகத்தின் இழப்பு, மருத்துவ அலுவலர் ஒருவரால் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அதிகபட்சமானது.".* | *60* |

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IV இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய அட்டவணை இடப் படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை IV இனை மாற்றீடு செய்தல்

"**அட்டவணை** IV [பிரிவு 6]

**செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டுத்தொகை**

| ஊறுற்ற வேலையாளின் மாதாந்த வேதனங்கள் | | வேலையாளின் இறப்பு | வேலையாளின் நிரந்தர இயலாமை | வேலையாளின் தற்காலிக இயலாமைக்கு அரை மாத நட்டஈடு |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 0 | 10,000 | 1,140,000 | 1,200,000 | 5,000 |
| 10,001 | 12,500 | 1,180,000 | 1,240,000 | 5,625 |
| 12,501 | 15,000 | 1,220,000 | 1,280,000 | 6,875 |
| 15,001 | 17,500 | 1,260,000 | 1,320,000 | 8,125 |
| 17,501 | 20,000 | 1,300,000 | 1,360,000 | 9,375 |
| 20,001 | 22,500 | 1,340,000 | 1,400,000 | 10,625 |
| 22,501 | 25,000 | 1,380,000 | 1,440,000 | 11,875 |
| 25,001 | 27,500 | 1,420,000 | 1,480,000 | 13,125 |
| 27,501 | 30,000 | 1,460,000 | 1,520,000 | 14,375 |
| 30,001 | 35,000 | 1,510,000 | 1,570,000 | 16,250 |
| 35,001 | 40,000 | 1,560,000 | 1,630,000 | 18,750 |
| 40,001 | 45,000 | 1,610,000 | 1,680,000 | 21,250 |
| 45,001 | 50,000 | 1,660,000 | 1,730,000 | 23,750 |
| 50,001 | 55,000 | 1,710,000 | 1,780,000 | 26,250 |
| 55,001 | 60,000 | 1,760,000 | 1,830,000 | 28,750 |
| 60,001 | 70,000 | 1,820,000 | 1,890,000 | 32,500 |
| 70,001 | 80,000 | 1,880,000 | 1,960,000 | 37,500 |
| 80,001 | 90,000 | 1,940,000 | 2,000,000 | 42,500 |
| 90,001 | 100,000 | 2,000,000 | 2,000,000 | 47,500 |
| 100,000 | அத்துடன் அதற்கு மேல் | 2,000,000 | 2,000,000 | 47,500 |

.".

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*